# சமயம்

# சில சிந்தனைகள்



தொகுப்பாளர்:

வாஜஸரவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் - சில சிந்தனைகள்

(ஆய்வுரைத் தொகுப்பு)

தொகுப்பாளர்

**வாகரைவாணன்**

வெளியீடு:

**கலை பண்பாட்டுக் களரி**

இல. 1, யேசு சபை வீதி

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : 05-12-1999

வகை : ஆய்வு இலக்கியம்

வெளியீடு (2) : கலை பண்பாட்டுக் களரி
இல. 1, யேசு சபை வீதி,
மட்டக்களப்பு.

உரிமை : வண. பிதா போல் சற்குணநாயகம்

அச்சுப் பதிப்பு : ஜெஸ்கொம் ஒப்செற் அச்சகம்,
மட்டக்களப்பு.

விலை : ரூபா 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சமத்துவம் பேணுவோம்

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு ECUMENISM என்னும் ஆங்கிலச் சொல் கத்தோலிக்க உலகில் ஓங்கி ஒலித்தது. இதற்கான காரணம்- உலகளாவிய ரீதியில் கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்னும் உந்துணர்வாகும்.

ஆயினும் 23ம் அருளப்பர் பாப்பரசரால் ஆரம்பிக்கப்பட்டு 6ம் சின்னப்பர் பாப்பரசரால் முன்னெடுக்கப்பட்ட 2ம் வத்திக்கான் பேரவை, ஆண்டு பல கடந்தும் அது விழைந்து நின்ற ஒற்றுமைக்கான பயணம் இன்றும் மிக நெடியதொன்றாகவே தோன்றுகின்றது.

இன்னும் சொல்லப்போனால் வத்திக்கான் பேரவை தொடங்கப்பட்ட பின்புதான் புதிய புதிய கிறிஸ்தவ சபைகள் கிளைவிட்டுக்கொண்டிருக்கின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை.

கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமையை விரும்பும் கத்தோலிக்கம் - கிறிஸ்தவம் அல்லாத சமயங்களில் ஊடுருவியுள்ள உண்மை, புனிதத் தன்மை என்பனவற்றைத் தான் புறந்தள்ளிவிடவில்லை (DECLARATION ON THE RELATION OF THE CHURCH TO NON-CHRISTIAN RELIGIONS - Page 549) என்று அறிவித்தது.

இவ்வறிவிப்பு உலக மக்களை ஒன்றாக நோக்க வேண்டும் என்னும் கத்தோலிக்கத்தின் அதி உயர் விருப்பத்தையே தொட்டுக்காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இதுவும் அதன் முதல் நோக்கத்தைப் போலவே தொலை தூரத்து நட்சத்திரமாகவே இன்றும் தோன்றுகின்றது.

இன்னும் - தனது எண்ணங்கள் நிறைவேறவில்லை என்பதற்காகக் கத்தோலிக்கம் தன் முயற்சியை இடையில் முறித்துவிடவில்லை; அது தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதன் ஓர் அடையாளமாகவே இச்சிறு நூலினை மட்டக்களப்பு கலை பண்பாட்டுக் களரி வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

இந்நூலில் இஸ்லாமிய நெறி தொடர்பான ஓர் ஆய்வுரையும் இடம்பெற வேண்டுமென்று விரும்பி பலரை அணுகினோம். பயன் கிடைக்கவில்லை. இந்நூலைப் பொறுத்தவரையில் இது ஒரு குறைபாடு என்பதில் ஐயமில்லை. இதற்காக எம்மை வர்சகர்கள் மன்னிக்க வேண்டும்.

மட்டக்களப்பு கலை பண்பாட்டுக் களரியின் இரண்டாவது வெளியீடு இது என்பதில் நமக்கு மெத்த பெருமையும் மகிழ்வும் உண்டு.

இம்முயற்சியில் எமக்கு எல்லா வழிகளிலும் உதவியாக நிற்கும் தவத்திரு. போல் சற்குணநாயகம் அடிகளாருக்கு எமது இதய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

16-12-1999 அன்பன்

மட்டக்களப்பு. வாகரைவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் - ஒரு பார்வை

## வாகரைவாணன்

சமயம் - அல்லது மதம் என்பது மக்கள் வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாததோர் பண்பாட்டு அம்சமாகும். இறைவனை மையமாகக் கொண்டு இயங்கும் இச் சமயங்கள் மனிதனை அந்த இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் அரும்பெரும் பணியைப் பல்லாயிரம் ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றன.

சமயங்கள் பல. அவை அனைத்தும் 'ஒன்று' பற்றிப் பேசுகின்றன என்பது ஆன்றவிந்த ஞானிகளின் வாக்காகும். இவ் வாக்கினைத் துரதிஷ்டவசமாக பாமரர் போல் வெறும் புத்தகப் படிப்பாளிகளும் மறந்து போகிறார்கள். இதனால் ஏற்படும் விளைவுகள் எத்தனையோ!

உண்மை ஒரு மதத்திற்கு மட்டுமே உரியதல்ல. அது அனைத்துமத போதனைகளிலும் ஊடுருவியிருக்கின்றது. எனினும் அது எடுத்துச் சொல்லப்படும் முறைகளினால் சில சமயம் திரிக்கப்பட்டுவிடுகின்றது. இதன் காரணமாகத்தான், உண்மை தேடிக்கண்டடைய வேண்டியதொன்று என்று ஞானிகள் எடுத்துரைத்துள்ளார்கள். திருவள்ளுவர்,

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
- அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்று தெளிவாகவே கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவனுக்கு முன்பு வாழ்ந்த கோதம அல்லது கௌதம எனும் பழங்குடியைச் சேர்ந்த இளவரசராகிய சித்தார்த்தர் என்பவர் தமது நீண்ட தேடுதலின் ஊடாகவே புத்தராகப் (The awakened one) பிரகாசித்தார் என்று அவரது வரலாற்றில் படிக்கின்றோம். ஆயினும், சித்தார்த்தர் போல, அல்லது நம் காலத்தில் வாழ்ந்து தமது 90வது வயதில், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த தத்துவஞானி ஜே. மிகப் கிருஸ்ணமூர்த்தி போல உண்மையை எத்தனை போரால் தேடிக் கண்டடைய முடியும்? எனவே தான் சமூகத்தில் பெரும்பான்மையோருக்குச் சமயங்கள் பெரும் வரப்பிரசாதமாக அமைந்து விடுகின்றன.

சமயம் இல்லாத சமூகம் இல்லை என்ற நிலையில், சமயங்கள் எப்போது தோற்றம் பெற்றன என்னும் கேள்வியை நாம் எழுப்புவோமானால், அது மிகவும் சுவாரசியமாகவே இருக்கும். எனினும், அறிஞர் பெருமக்கள் இக்கேள்விக்கு இருவிதப் பதில்களை முன் வைப்பர்.

ஒன்று-விலங்கு நிலையில் இருந்த ஆதிகால மனிதன் இயற்கையையும் (காற்று, நீர், நெருப்பு, ஒளி என்பன) அதன் ஆற்றலையும் கண்டு அஞ்சி, அது தன்னைவிட உயர்ந்தது என்று கருதி அதனைத் தெய்வமாகவே வழிபடத் தொடங்கியமை (இதற்கு எடுத்துக்காட்டாக ஆரியர்களால் வணங்கப்பட்ட அக்கினி வருணன், வாயு முதலான வேதகாலத் தெய்வங்களை இங்கே குறிப்பிடலாம்.)

இரண்டு - மனிதனின் முடிவைக் (மரணத்தை) கண்டு அஞ்சிய மனிதன் இதற்கு எது காரணம் என்று ஆராயத் தலைப்பட்டமை, ஏனெனில் காரணம் இன்றி எந்தக் காரியமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று தன் அனுபவ வாயிலாக அவன் அறிந்தே இருந்தான். இந்தக் காரணமே காலகதியில் பரம்பொருள் (The ultimate) எனும் பெயர் பெறலாயிற்று.

இவ்வாறு தோற்றம் பெற்ற சமயம் சார்ந்த ஞானிகள் தமது பரம் பொருளை இரு வழிகளில் தேட முயன்றனர். ஒன்று - தன்னுள் காண்பது. (இது ஆரியர்களுக்குரியது) இரண்டு - தனக்கு வெளியே காண்பது. (இது செமிற்றிக் Semitic இனத்தாருக்குரியது.)

இன்று - இவ்விரு வழிகளில் முதலாவதனை இந்துக்களிடையேயும், மற்றதனை யூத கிறிஸ்தவர்களிடையேயும் நாம் காணலாம்.

இறை தேடலில் சமயங்கள் முன்வைக்கும் இன்னுமொரு முக்கிய ஆய்வுக்குரிய விடயம் ஆன்மா என்பதாகும். இதுபற்றி சுவாமி விவேகாநந்தர் பேசும்போது, ஆன்மா மாற்றம் இல்லாத ஒன்று, நித்தியமான, தூய, என்றும் ஆனந்தம் நிறைந்த ஒன்றாகும் என்று குறிப்பிடுகின்றார். (சுவாமி விவேகாநந்தரின் ஞானதீபம் - சுடர் - 3).

ஆன்மா பற்றிய கோட்பாடு இந்திய தத்துவ ஞானத்தில் மிகமிக முக்கியமானதாகும். இன்னும் சொல்லப்போனால் ஓர் இந்துவைப் பொறுத்த வரையில் அவனின் இறைதேடல் ஆன்மா பற்றிய விசாரணையில் இருந்தே ஆரம்பமாகின்றது. இவ்விசாரணை உபநிடத கால முனிவர்களிடமே இருந்தமைக்கு உபநிடதங்களே சான்றாக விளங்குகின்றன. இவ்வான்மா பற்றிய கோட்பாட்டை பௌத்தம் நிராகரிக்கும் அதே நேரத்தில், வேதாந்தம், சாங்கியம், சைவசித்தாந்தம் என்பன வெவ்வேறு தளங்களில் வைத்து அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகின்றன. உதாரணத்திற்கு, சாங்கியம், ஆன்மாக்கள் பல என்று கூற, அத்வைதம் (வேதாந்தம்) அது ஒன்றே ஒன்று என்றும் மற்றவை அதன் தோற்றங்கள் என்றும் விளக்கம் தருகின்றது.

கிறிஸ்தவம், யூத சமயம், இஸ்லாம் என்பனவும் ஆன்மா பற்றிப் பேசுகின்றன. ஆயினும் கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் 1990ம் புத்தாண்டு தொடர்பாக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் (Pope) விடுத்த செய்தியில் மிருகங்களுக்கும் ஆன்மா உண்டு (The wordsworth Encyclopidia volume-5, 1999) என்று ஏற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

இறை - ஆன்மா - இவ்விரண்டும் சமய ஞானிகளைப் பொறுத்தவரையில் முடிவற்ற ஆய்வுக்குரிய விடயங்களாகவே இருக்கின்றன. (இவ்விரண்டையும் இந்திய சமயங்களில் ஒன்றான பௌத்தம் நிராகரிக்கும் அதேவேளை பௌத்தத்தைவிடப் பழமையான சமணம் இறைக் கோட்பாட்டை மறுதலித்து விட்டு, ஆன்மீகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதைப் பார்க்கின்றோம். (ஹரியண்ணாவின் இந்தியத் தத்துவம்-1-பக்கம் 173)

இந்தத் தேடுதலிலேயே அறிவியலுக்கும் சமயத்திற்கும் இடையே உள்ள மிகப்பெரிய வேறுபாட்டைக் கவனிக்கலாம். அதாவது எந்த ஒரு அறிவியல் தேடலும் அது தொடர்பான ஒருமையைக் கண்டதும் முற்றுப்பெற்று விடுகின்றது. ஆனால், இறை ஆன்மா பற்றிய தேடல் இன்னும் முற்றுப்பெறாத ஒரு முயற்சியாகவே இருக்கின்றது. இது காரணமாகவே கடவுள் பற்றிப் பேசும்போது Mystery எனும் சொல் பயன்படுத்தப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். இச்சமயத்தில் இது தொடர்பாக ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறும் கருத்து நமது ஆழ்ந்த கவனத்திற்குரியது. அவர் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதிக சாஸ்திரம் அளவுக்குட்பட்ட விஷயங்களைப் பற்றி மட்டுமே கூறுகின்றது. அளவுக்கு அப்பாற்பட்ட இடத்திலிருந்து அது யாதொரு செய்தியையும் கொண்டு வருவதில்லை. ஈசுவரனைத் தரிசித்த ரிஷிகளால் தான் அளவுக்கு அப்பாற்பட்ட செய்தியைக் கொணர முடியும் (ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அருளிய உபதேச மொழிகள் - பக்கம் 328).

சமயங்கள் பற்றிப் பேசும்போது சுவாமி விவேகாநந்தர் அவை, தத்துவம், புராணம், சடங்கு எனும் மூன்று படிகளைக் கொண்டவை என்பார். (சுவாமி விவேகாநந்தரின் ஞானதீபம்-சுடர்-2 பக்கம்-239) இம்மூன்றில் சுவாமிகளின் கருத்தின் பிரகாரம், தத்துவம், புராணத்தைத் தளமாகக் கொண்டது. அதிக அளவில் சாதாரண மக்களின் ரசனைக்கும், மரியாதைக்குமுரியதாக இருக்கும் புராணங்கள், ஞானிகள், மாவீரர்கள், தேவர்கள் ஆகியோரின் வரலாறு, கதைகள், ஐதீகங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக விளங்குகின்றன. இப்புராணங்களின் ஆற்றலுக்கும் அவற்றில் சாதாரண மக்களுக்கிருந்த அளவுகடந்த நம்பிக்கைக்கும் ஓர் காட்டாக தமிழகத்தில் கி.பி. 5ம் நூற்றாண்டில் உருவான இந்துமத எழுச்சியை இங்கே குறிப்பிடலாம். இவ்வெழுச்சியே ஞானமார்க்கமான சமண மதத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலியது என்பதையும் வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

தத்துவம் இதற்கு நேர்மாறானது. ஏனெனில் இது அறிஞர்கள், சிந்தனையாளர்களின் அரிய பொக்கிஷம். பாமர மக்கள் இதன் பக்கம் போவதே இல்லை எனலாம். மூன்றாவது படியான சடங்கு, உருவ வழிபாட்டை மையமாகக் கொண்டு மனிதர்களால் உருவாக்கப்படுவது. இதுவும் புராணத்தைப் போலவே, சாதாரண மக்களையே பெரிதும் ஈர்ப்பதை நாம் நேரடியாகவே காண்கின்றோம். ஆன்ம ஈடேற்றத்திற்காக சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் முன்வைக்கும் நான்கு வழிகளில் ஒன்றான கிரியையே - சடங்கு என்று நாம் இங்கே விளக்க வேண்டுவதில்லை. இந் நாற்பாதங்கள் பற்றி டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் பேசும்போது ஞானத்தின் வழியாகவும் ஒருவன் தன் ஆன்ம விடுதலையைப் பெறலாம் என்பார். இறைவனையும் ஆன்மாவையும் முதன்மைப்படுத்தி வந்த சமயங்கள் இன்று மனித ஒழுக்கத்தைப் (ETHICS) பெரிதும் வலியுறுத்திவருவதைப் பார்க்கின்றோம். இதற்கு மனித வாழ்க்கையில் மலிந்து போன முரண்பாடுகளும், நெறிபிறழ்வுகளுமே காரணிகளாகின்றன. இக்காரணிகளினாலேயே சமயங்கள் இன்று சமூக மயப்படுத்தப்பட்ட தொண்டு நிறுவனங்களாக மாறிவருகின்றன. அதாவது சமயங்களில் இறைவன் இருந்த இடத்தில் இன்று மனிதன் இருக்கின்றான்.

இந்த யுகம் 'மனிதம்' பற்றி மிக அதிகமாகப் பேசப்படும் யுகம். மனிதனும் மனிதனின் தேவைகளும் உலகை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கினற இந்தக் காலகட்டத்தில் மனிதன் தெய்வம், தெய்வாம்சம் பொருந்தியவன் - இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன் என்னும் உபநிடத, பைபிள் வாசகங்கள் இன்று ஓங்கி ஒலிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் மனிதனை மையமாகக் கொண்ட சமயங்களின் சமூகப்பணி (அதிகமாக ஐரோப்பிய தேசங்களில்) பலம் பெற்று வருவதையும் காண்கின்றோம். இப்பணி கீழைத்தேசங்களில், குறிப்பாக இந்தியாவில் முன்னெடுக்கப்படுகின்றமைக்கு 'கிறிஸ்தவத் தூண்டுதலே' பெரிதும் காரணம் எனலாம். ஏனெனில் மனிதனில் மட்டுமன்றி புழுபூச்சிகளிலும் பரமாத்துமாவைக்காணும் இந்துமதம் மனிதனின் புறத்தேவைகளை இரண்டாம் இடத்தில் வைத்துவிட்டு இன்றும் ஆத்ம விசாரத்திலேயே அதிகம் மூழ்கியிருக்கின்றது. இதற்கு ஓர் நல்ல உதாரணமாக 11-08-99ல் உலகின் பல நாடுகளில் சூரிய கிரகணம் தோன்றியபோது, அந்த இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வை ஐரோப்பியர்கள் பார்த்து ரசித்து வியந்த அதே நேரத்தில் - இந்துக்களும் இஸ்லாமியர்களும் மத அனுட்டானங்களில் ஈடுபட்டிருந்தமையை இங்கே குறிப்பிடலாம். இந்த வேறுபாடு மேற்கு ஐரோப்பிய உலகத்தை (Humanitarian world) மனித மேம்பாட்டு உலகம் என்றும், கீழைத் தேசங்களை (Spiritual world) ஆன்மீக உலகம் என்றும் குறிக்கப் போதுமானதாகும்.

இத்தகையதொரு நிலையில் சமயங்கள் இன்று சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்களைப் போன்றவைதானா என்னும் கேள்வி எழுப்பப்படலாம். இக்கேள்விகளுக்கு அறிஞர் பெருமக்கள் பின்வரும் பதிலை அளிக்கக்கூடும்.

காலத்தின் தேவைகளுக்கேற்ப மதங்களும் தம் நிலையை மாற்றியே வந்திருக்கின்றன. ஆரம்ப காலத்தில் இயற்கை வழிபாடு (PANTHEISM), பல தெய்வக் கோட்பாடு (POLYTHEISM)ஏக இறைத் தத்துவம் (MONISM) எனவும் பின்பு அறம், ஒழுக்கம் எனும் மனித விழுமியங்களையும் பக்தி எனும் மனித உணர்ச்சியையும், மையப்படுத்திய சமயங்கள் இன்றைய காலகட்டத்தில் தம் தொனியை மாற்றவேண்டிய நிலையில் இருக்கின்றன. இது காலத்தின் கட்டளை. ஏனெனில் மாற்றத்திற்குட்படாத அனைத்தும் மரித்துப்போய்விடும். இது இயற்கையின் நியதி.

அறிஞர்கள் முன்வைக்கக்கூடிய மேற்படிப் பதிலினை சமயங்கள் அனுசரித்துப் போகும் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படத்தொடங்கியுள்ளன. இவை சடங்குகளிலும், அதீத நம்பிக்கைகளிலும் மூழ்கிப்போயுள்ள சாதாரண மக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தரும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாந்தச் சிந்தனை

*(சுவாமி விவேகாநந்தரின் கருத்தைத் தழுவியது)*

**சுவாமி அஜராத்மாநந்தா**

வேதாந்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற அறிவுக் களஞ்சியமாகிய ஆன்மீகக் கருவூலம் ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. 'ரிஷி' என்றால் 'மந்த்ர த்ருஷ்டா' அதாவது மந்திரத்தை, ஒரு சிந்தனையை நேரே கண்டவர் என்று கூறப்படுகிறது. அவர்கள் அந்தச் சிந்தனையைக் கண்டவர்களே தவிர, அந்தச் சிந்தனைகள் அவர்களுடையவை அல்ல. வேதத்தின் இன்ன பகுதி இன்ன ரிஷியிடமிருந்து வெளிவந்தது என்றால் அந்தப் பகுதியை அவர் எழுதினார், அவர் தன் மனத்திலிருந்து அதனை உருவாக்கினார் என்றோ நினைக்கக் கூடாது. ஏற்கனவே இருந்த, சாசுவதமாக விளங்கி வந்த சத்தியத்தை அவர் கண்டார். அவ்வளவுதான். அது பிரபஞ்சத்தில் எப்பொழுதும் இருக்கிறது. ரிஷி அதைக் கண்டுபிடித்தார். ரிஷிகள் ஆன்மீகக் கண்டுபிடிப்பாளர்கள்.

வேதங்கள் முக்கியமாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை கர்ம காண்டம், ஞான காண்டம் என அழைக்கப்படும். கர்ம காண்டம் என்றால் செயல் அல்லது சடங்குப் பகுதியாகும். அறிவு அல்லது ஆன்மீகப் பகுதி ஞான காண்டம் எனப்படும். கர்ம காண்டம் பல்வேறு யாகங்கள் பற்றிக் கூறுகிறது. தற்போதைய சூழ்நிலையில் செய்யப்பட முடியாதவை என்று அவற்றுள் பலவும் கைவிடப்பட்டுவிட்டன. எஞ்சியவை ஏதோ ஒரு விதத்தில் இன்றுவரை இருக்கவே செய்கின்றன. சாதாரண மனிதன், மாணவன், இல்லறத்தான, துறவி என்று வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கான கடமைகள் பற்றிக் கூறுவது முக்கியமான அம்சமாகும். இவை இன்றும் ஓரளவிற்கு வழக்கத்தில் உள்ளன.

இந்து சமயத்தின் ஆன்மீகப் பகுதி இரண்டாம் பகுதியான ஞான காண்டத்தில் உள்ளது. இதுவே வேதாந்தம், வேதங்களின் நிறைவு, வேதங்களின் சாரம், அதன் லட்சியம். வேதங்களின் சாரமான கருத்து வேதாந்தம் எனப்படுகிறது. இந்தப் பகுதியில் தான் உப-நிடதங்கள் உள்ளன. இந்து மதத்தின் தத்துவப் பிரிவுகளான துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய பிரிவுகளாயினும் சரி சைவம், சாக்தம், வைணவம் ஆகிய சமய வழிபாட்டுப் பிரிவுகளாயினும் சரி இந்தியாவிலுள்ள மதப் பிரிவுகள் எதுவாயினும், இந்து மத்தின் ஒரு பிரிவாகத் தன்னைக் கூறத் துணிவுள்ள எந்த நெறியாயினும் அவை உபநிடதங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்

தங்களுடைய சமய, சம்பிரதாய, தத்துவப் பிரிவுகளுக்கேற்ப உபநிடதங்களுக்கு விளக்கம் காணும் உரிமை அவைகளுக்கு உண்டு. இந்து சமயத்தின் சிறிய பிரிவுகளில் கூட உபநிடதச் சிந்தனைகளின் தாக்கத்தைக் காணலாம். உபநிடதங்களிலுள்ள உயர்ந்த ஆன்மீகச் சிந்தனைகளும் கருத்துக்களும் பல்வேறு சின்னங்களின் வடிவில் இன்றும் இந்து இல்லங்களில் வழிபடப்பட்டு வருகின்றன. அநேகமாக இந்து மதத்திலுள்ள அனைத்துச் சின்னங்களும் வேதாந்தத்திலிருந்து வந்தவைதாம்.

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை. ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கையிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளன. ஆத்மா, கடவுள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவ உண்மைகள் ஒருபோதும் மாறாதவைகள். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவை இருந்ததுபோலவே இன்றும் உள்ளன. லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படியேதான் இருக்கும்.

இந்து சமயக் கோட்பாடுகளும் கொள்கைகளும் வேறுபட்டாலும் அவைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையான, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் உண்டு. அவைகளைச் சுருக்கமாக வாசகர் முன்வைக்க முயற்சிக்கிறோம்

## உலகத் தோற்றம்:

முதலாவது படைப்பைப் பற்றியது. அதாவது இயற்கை, பிரகிருதி, மாயை பற்றியது. இன்ன நாள், இந்த உலகம் உருவாக்கப்பட்டது. ஒரு கடவுள் வந்து இந்த உலகைப் படைத்தார். அதன் பிறகு இன்றுவரை அவர் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதில்லை. படைப்பாற்றல் இன்னும் இயங்கிக் கொண்டேதான் இருக்கிறது. கடவுள் எப்போதும் படைத்துக்கொண்டே இருக்கிறார். ஒருபோதும் ஓய்வு கொள்வதில்லை. "உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம்" "நான் கர்மம் (செயல்) செய்யாவிட்டால் இவ்வுலகங்கள் அழிந்து போம்", என்று ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. நம்மைச் சுற்றி இரவும் பகலும் இயங்கிக் கொண்டே இருக்கின்ற அந்தப் படைப்பாற்றல் ஒரு வினாடி நின்று போனாலும் எல்லாம் தரைமட்டமாகிவிடும். பிரபஞ்சம் முழுவதும் அந்தச் சக்தி இயங்காத நேரமே கிடையாது. படைப்புக்கான சமஸ்கிருதச் சொல் ஸ்ருஷ்டி எனப்படும். 'ஸ்ருஷ்டி' என்னும் சொல்லைச் சரியாக மொழிபெயர்த்தால் அது வெளிப்பாடு (Projection) என்று பொருள் தருமே தவிர படைப்பு (Creation) என்று பொருள் தராது. ஆங்கிலத்தில் படைப்பு என்ற சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூன்யத்திலிருந்து ஏதோ ஒன்று தோன்றுதல், ஒன்றுமில்லாதிருந்து படைப்பு, இல்லாத ஒன்று இருப்பதாக மாறுதல் என்றெல்லாம் முதிர்ச்சியற்ற பொருளைத் தருகிறது. ஆனால் இதற்கு வேதாந்தம் 'வெளிப்பாடு' என்கிறது. இந்த இயற்கை மொத்தமும் இருக்கிறது. பிறகு நுட்பமாகிறது, ஒடுங்குகிறது. ஒரு குறிப்பிட்ட கால ஓய்விற்குப் பின்னர், வெளிப்படுவதுபோல் மீண்டும் எல்லாப் பொருட்களும் தோன்றுகின்றன; அதே சேர்க்கை, அதே பரிணாமம், அதே வெளிப்பாடுகள் தோன்றுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலம் விளையாடல் நடைபெறுவதுபோல் தோன்றுகிறது. பின்னர் சேர்ந்த அனைத்தும் மீண்டும் சிதறி, நுட்பமாகி, மேலும் நுட்பமாகி எல்லாம் ஒடுங்கி விடுகிறது. மறுபடியும் வெளிவருகிறது. இவ்வாறு ஓர் அலையைப்போல் முன்னால் வருவதும் பின்னால் போவதுமாக காலங்காலமாக இந்த இயக்கம் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். காலம், இடம், காரணம் எல்லாம் இந்த இயற்கைக்குள்தான் உள்ளன. எனவே இந்தப் பிரபஞ்சம் ஒரு காலத்தில் படைக்கப்பட்டது. என்று சொல்வது புத்திபூர்வமானதல்ல. அதன் தோற்றத்தைப் பற்றியோ முடிவைப் பற்றியோ எந்தக் கேள்வியும் எழ முடியாது. எனவே இந்தப் புனித நூல்களில் எங்கெல்லாம் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் முடிவு என்று வருகிறதோ அதனை ஒரு சுழற்சியின் தோற்றம் மற்றும் முடிவு என்று கொள்ளவேண்டும்.

**பரம்பொருள்:**

வேதாந்தத்தில் பரம்பொருளை 'பிரம்மம்' என்று அழைப்பர். அவர் என்றும் இருப்பவர், என்றும் தூய்மையானவர், என்றும் விழிப்போடு இருப்பவர், எல்லா ஆற்றலும் கொண்டவர், எல்லாம் அறிந்தவர், கருணைமயமானவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர், பிரிவு இல்லாதவர், அவர் இப்பிரபஞ்சத்தை படைத்துக்கொண்டும் காத்துக்கொண்டும் இருப்பதாகச் சொன்னால் இரண்டு சங்கடங்கள் எழுகின்றன. நாம் இந்தப் பிரபஞ்சத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கிறோம். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்தே மகிழ்ச்சியாக இருக்கிறான், மற்றொருவன் துயருறுகிறான்; ஒருவன் பணக்காரனாக இருக்கிறான், மற்றொருவன் ஏழையாக இருக்கிறான். இது ஓரவஞ்சனையையே காட்டுகிறது. வாழ்க்கையின் நியதியே மரணமாக உள்ளது. ஒவ்வொருவனும் தன் சொந்த சகோதரனிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பறித்துக்கொள்ள முயல்கிறான்.

இந்தப் போட்டி கொடூரம், பயங்கரம் எல்லாம் இரவும் பகலும் மனித இதயங்களைக் கிழித்துக்கொண்டே இருக்கின்றன. இதுதான் நமது உலகத்தின் நிலைமை. ஆனால் இங்கே ஓரவஞ்சனை இருக்கிறது என்றால், போட்டி நிலவுகிறது என்றால் தவறு கடவுள் மீது இல்லை என்கிறது வேதாந்தம். அப்படி இவற்றை உண்டாக்குவது யார்? நாமே. மேகம் எல்லா நிலைகளின் மீதும் சமமாகவே மழையைப் பொழிகிறது. ஆனால் நன்றாக உழுது பண்படுத்தப்பட்ட நிலம் மட்டுமே அந்த மழையால் பலன் பெறுகிறது; பண்படுத்தப்படாத நிலமோ, நல்ல முறையில் கவனம் செலுத்தப்படாத நிலமோ மழையின் எந்தப் பலனையும் பெறமுடியாது. அது மேகத்தின் குற்றம் அல்ல. அதுபோல கடவுளின் கருணை நிரந்தரமானது, மாறாதது. நாம்தான் வேற்றுமைகளை உண்டாக்குகிறோம். ஆனால் உலகத்திலிருந்தே சிலர் மகிழ்ச்சியோடு இருப்பதையும், சிலர் துன்பத்தில் வாடுவதையும் எப்படி விளக்குவது? இந்த வேற்றுமையை உண்டாக்க அவர்கள் எதுவும் செய்யவில்லை. இந்தப் பிறவியில் ஒன்றும் செய்யவில்லை, உண்மைதான்; ஆனால் சென்ற பிறவியில் செய்தார்கள், சென்ற பிறவியில் செய்தவை இந்தப் பிறவியின் நிலைமைக்கான காரணங்கள் என்பதே வேற்றுமைகளின் விளக்கம்.

வாழ்க்கை நிரந்தரமானது. ஒன்றும் இல்லாதலில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரவில்லை, அப்படி வரவும் முடியாது. காலத்தின் கட்டிற்குள் தோன்றுகின்ற எல்லாம் அதற்குள்ளேயே முடிந்தாகவேண்டும். வாழ்க்கை நேற்றுத்தான் துவங்கி இருக்குமானால் அது கட்டாயம் நாளை முடிவுக்கு வந்துவிடும், முழுமையான அழிவுதான் அதன் விளைவாக இருக்கமுடியும். வாழ்க்கை இருந்துகொண்டே இருக்கிறது. இன்றைய விஞ்ஞான முடிவுகள் இவ் உண்மைக்கு அனுசரணையாக உள்ளன.

ஒவ்வொரு மனிதனும் முடிவற்ற கடந்த காலத்தின் விளைவாகும். மின்னல் வெட்டுவதுபோல் இயற்கையின் கைகளிலிருந்து குழந்தை திடீரென உலகில் வந்துவிடவில்லை. எல்லையற்ற கடந்தகாலம் என்னும் சுமை அவனிடம் உள்ளது. நல்லதற்கோ கெட்டதற்கோ, அவன் தன் கடந்தகாலக் கர்மங்களைப் கழிப்பதற்காக வந்துள்ளான். இந்தக் கர்மங்கள் தாம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்குகின்றன. இது கர்ம நியதி. நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த விதியை உருவாக்குபவர்களாக இருக்கிறோம். நாம் துயருறுவதற்கு நாமே தான் காரணம். வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள், நாமே காரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நாம் துன்பப்பட்டால் அது நமக்கு நாமே உண்டாக்கிக்கொண்டது. நாம் விரும்பினால் நாம் மகிழ்ச்சியாக இருக்கமுடியும் என்பதையும் காட்டுகிறது. நாம் தூய்மையற்றவர்களாக இருந்தால் அதுவும் நாம் செய்துகொண்டதுதான். இதுவே, நாம் விரும்பினால் தூயவனாக இருக்கமுடியும் என்பதையும் காட்டுகிறது. மனித சங்கல்பம் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான சங்கல்பத்திற்கும், சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும், இயற்கையின் ஆற்றல்கள்கூட, கட்டாயம் தலை வணங்கியே தீரவேண்டும். இதுதான் கர்ம நியதியின் விளைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆன்மா:**

நாம் நமது ஆன்மாவை அறியாமல் கடவுளைப் புரிந்துகொள்ள முடியாது. வெளி உலகை ஆராய்வதன் மூலம் நாம் பரம் பொருளை உணரமுடியாது. மனித ஆன்மாவை ஆராய்ச்சி செய்வதன் மூலம் மட்டுமே நாம் கடவுளை அறிய முடியும். ஆன்மாக்களுக்கு தோற்றம் முடிவு இல்லை. அவை இயல்பாகவே அமரத்துவம் வாய்ந்தவை. எல்லாச் சக்திகளும், ஆசீர்வாதங்களும், தூய்மையும், எங்கும் நிறைந்த தன்மையும் எல்லாம் அறிகின்ற தன்மையும் ஒவ்வோர் ஆன்மாவிலும் மறைந்துள்ளது. பலவீனமானது, வஞ்சகமானது, உயர்ந்தது, தாழ்ந்தது போன்ற வேறுபாடுகள் எதுவும் இன்றி ஒவ்வொரு மனிதனிலும் ஒவ்வொரு மிருகத்திலும், எங்கும் நிறைந்த எல்லாம் அறிகின்ற ஒரே ஆன்மா உறைகிறது. வேற்றுமை ஆன்மாவில் இல்லை, அதன் வெளிப்பாட்டிலேயே உள்ளது. ஆனால் அடிப்படையில் இருவரும் சமமேயாகும். "இவ்வாறு எல்லா உடம்புகளிலும் ஒரே இறைவன் உறைகிறார் என்பதை அறிகின்ற மகான், எல்லா உயிர்களையும் அவ்வாறே வழிபடுகிறார்" என்று உபநிடதங்கள் கூறுகின்றன.

ஆன்மா வேறு, மனம் வேறு. முதலில் உடல், அடுத்து மனம், இவ் இரண்டையும் கடந்து உள்ளது ஆன்மா. மனம் சூட்சும சரீரம், மிக நுட்பமான பொருட்களால் ஆக்கப்பட்டது. பிறப்பிலிருந்து இறப்பு என்று தொடர்ந்து செல்கிறது. மனிதன் அடிப்படையில் ஆன்மாவாகும். இந்த ஆன்மா நுண்ணுடலாகிய மனத்துடன் சேர்ந்து பிறப்பு இறப்புச் சூழலில் சென்று கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் ஞானம் பெற்று, தனது பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அதன் பிறகு அதன் பிறப்பு - இறப்பு சுழற்சி நின்று விடுகிறது. ஆன்மா விரும்பினால் நுண்ணுடலாகிய மனத்தை விட்டுவிட்டுச் சுதந்திரமாக நிரந்திரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்திப் பேற்றில் திளைக்கலாம். ஆன்மாவின் இலட்சியம் முக்தியாகும்.

**சொர்க்கம்:**

சொர்க்கங்களும் நரகங்களும் உள்ளன. ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல, அப்படி இருக்கவும் முடியாது. சொர்க்கங்கள் இருக்குமானால் அவை இந்த உலகத்தின் நகல்களாகவே இருக்கும். சற்று அதிக அளவில் மகிழ்ச்சியும், அதிகமான போகமும் அங்கே இருக்கலாம். ஆனால் இவை யாவும் ஆன்மாவிற்குக் கேடு விளைவிற்கக் கூடியவை. இத்தகைய சொர்க்கங்கள் பல உண்டு. பலனை எதிர்பார்த்து நற்செயல்கள் புரிபவர்கள், இறந்த பின் ஏதாவது சொர்க்கங்களில் இந்திரன் போன்ற தேவர்களாகப் பிறக்கிறார்கள். தேவர்கள் என்பது சில குறிப்பிட்ட நிலைகளையே குறிக்கிறது. அவர்களும் மனிதர்களாக இருந்தவர்கள்தாம். நல்ல காரியங்கள் செய்ததால் தேவர்களாகி இருக்கிறார்கள். மேலும், இந்திரன் போன்ற பெயர்களும் ஒரே நபர்களின் பெயர்கள் அல்ல. அது ஒரு பதவி, ஒரு ஜீவன் உயர்ந்த நிலையை அடைந்ததும் இந்திர பதவியைப் பெறுகிறது. குறிப்பிட்ட காலம்வரை அந்தந்தப் பதவியில் இருக்கிறது. பிறகு இறந்து, மறுபடியும் மனிதனாகப் பிறக்கிறது. ஆனால் மனிதப் பிறவிதான் எல்லாவற்றிலும் மிக உயர்ந்த பிறவி. சொர்க்கத்திலும் கூட, சில தேவர்கள் அங்குள்ள இன்பங்களில் நாட்டம் கொள்ளாமல், அவற்றைத் துறந்து மேலே செல்ல முயலலாம். ஆனால் இந்த உலகத்தில் போலவே அவர்களுள் பெரும்பாலானோரை அங்குள்ள செல்வம், பதவி, போகம் முதலியவை மயக்கிவிடுகின்றன. எனவே தங்கள் புண்ணிய பலனை அங்கே அனுபவித்து முடித்துவிட்டு மீண்டும் பூமியில் மனிதர்களாகப் பிறக்கிறார்கள். அதனால்தான் இந்த உலகம் 'கர்மபூமி' என்று அழைக்கப்படுகிறது. இந்த உலகத்திலிருந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முக்திபெற முடியும். எனவே சொர்க்கங்கள் கூட நாம் அடையத்தகுந்தவை அல்ல.

## முக்தி அல்லது ஆன்ம விடுதலை

அப்படியானால் மனிதன் அடையத் தகுந்தது எது? முக்தி, சுதந்திரம், விடுதலை, மேலான சொர்க்கங்களில்கூட நீங்கள் அடிமைகளாக இருக்கிறீர்கள் என்றே வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. அங்கு இருபதாயிரம் வருடங்கள் அரசர்களாக இருந்தாலும் அதனால் என்ன பயன்? உடம்பு என்று ஒன்று இருக்கும்வரை புலனின்பத்துக்கு அடிமையாக மனிதன் இருக்கும்வரை, காலம் மனிதனைக் கட்டுப்படுத்தும் வரை மனிதன் அடிமையேயாகும். எனவே அக மற்றும் புற இயற்கைகளிலிருந்து விடுபடுவதே வேதாந்தம் கூறும் மேலான நோக்கமாகும். இயற்கை மனிதனின் காலடியில் விழவேண்டும். மனிதன் அதைக் காலால் மிதித்து, அதற்கு அப்பால் சென்று சுதந்திரமாகவும் மகோன்னதமாகவும் இருக்கவேண்டும். அங்கு வாழ்வு இல்லை, இன்பம் இல்லை, ஆகையால் துன்பமும் இல்லை. விளக்க முடியாத, அழிக்க முடியாத எல்லாவற்றையும் கடந்த பேரின்பம் அது. இங்கு நாம் மகிழ்ச்சி என்றும் நன்மை என்றும் எவற்றைச் சொல்கின்றோமோ, அவை அந்த எல்லையற்ற பேரின்பத்தின் வெறும் துளிகள் மட்டுமே. அளவற்ற அந்தப் பேரின்பத்தை அடைவதுதான் மானுடத்தின் இலட்சியம்.

## பெருமைமிகு ஆன்மா:

ஆன்மா பால் வேற்றுமை இல்லாதது. அது ஆணா பெண்ணா என்று யாராலும் கூறமுடியாது. பால் வேற்றுமை உடலுக்கு மட்டுமே. உடலைப் பொறுத்த வரையில் ஆண், பெண் என்று பேசுவது சரி. ஆன்மாவை அவ்வாறு பாகுபடுத்துவது அறிவீனம். வயது விஷயத்திலும் அவ்வாறுதான். அதற்கு வயதாவதே இல்லை. பழமையான அது எப்போதும் மாறாததாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. அது எப்படி இந்த வாழ்க்கையில் கட்டுண்டது? 'அறியாமை' தான் இந்தப் பந்தங்களுக்கெல்லாம் காரணம் அறியாமையினால்தான் நாம் கட்டுண்டோம். ஞானம் இந்தக் கட்டினை விலக்கி, நம்மை மறு கரைக்கு அழைத்துச்செல்லும். அந்த ஞானம் எப்படி வரும். அன்பின் மூலம், பக்தியின் மூலம், கடவுளை வழிபடுவதன் மூலம், எல்லா உயிர்களையும் கடவுளின் கோயிலென்று அன்பு செலுத்துவதன் மூலம், ஏனெனில் எல்லோரிலும் கடவுள் இருக்கிறார். அந்தப் பேரன்பின் மூலம் ஞானம் வரும், அறியாமை மறைந்து போகும், பந்தங்கள் அறுந்து போகும். ஆன்மா சுதந்திரம் பெறும். இங்கே மனிதன் நிரந்தரமான எல்லையற்ற, மரணமற்ற ஆன்மாவின் தன் சொந்த ஆன்மாவின் பெருமையில் திளைக்கிறான். அந்த ஆன்மாவை எந்த ஆயுதங்களாலும் வெட்ட முடியாது. எந்த வெப்பத்தாலும் உலர்த்த முடியாது. நெருப்பினால் எரிக்க முடியாது. நீரினால் நனைக்க முடியாது. அது எல்லையற்றது. பிறப்பற்றது, இறப்பற்றது. ஆரம்பமும் முடிவும் இல்லாதது. அதன் பெருமைக்கு முன்னால் இடம் (Space) என்பது சூன்யத்தில் கரைகிறது. காலம் என்பது இல்லாமல் ஒடுங்கி விடுகிறது.

பெருமைமிக்க ஆன்மாவில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதிலிருந்து ஆற்றல் வரும். எதை நினைக்கிறோமோ அதுவாக நாம் ஆவோம். வலிமையானவர்கள் என நினைத்தால் வலிமைமிக்கவர் ஆவோம். தூய்மையற்றவர்கள் என நினைத்தால் தூய்மையற்றவர்கள் ஆவோம். தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர்கள் ஆவோம்.

**பரம்பொருள**

இந்து சமயத் திருநூல்களில் கடவுளைப் பற்றி இரண்டு கருத்துக்கள் உள்ளன. ஒன்று சகுணம், மற்றொன்று நிர்க்குணம். சகுணக் கடவுள் குணங்களோடு நாம ரூபங்களோடு கூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாவற்றையும் படைத்தவர், காப்பவர், அண்டசராசரங்களின் நிலையான தந்தையும் தாயும் அவரே. நம்மிலிருந்தும் மற்ற உயிர்களிலிருந்தும் அவர் எப்போதும் வேறுபட்டவர். அவரை நெருங்குவதும் அவரில் வாழ்வதும்தான் முக்தி.

நிர்க்குணக் கடவுளைப் பற்றிய கருத்துக்கள் அடுத்து வருகின்றன. சகுணக் கடவுளை விளக்கிய குணநலன்கள் எல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்றும், பொருளற்றவை என்றும் இங்கே விளக்கப்படுகின்றன. அவர் உருவம் அற்றவர், எங்கும் நிறைந்தவர். அறிபவர் என்று அவரைக் கூறமுடியாது. ஏனென்றால் அறிதல், அறிவு என்பவையெல்லாம் மனித மனத்தில் மட்டுமே நிகழக்கூடியவை. சிந்திப்பவர் என்று அவரைக் கூறமுடியாது. ஏனென்றால் சிந்திப்பது பலவீனர்களின் வழி, அவரை ஆராய்பவர் என்று அவரைக் கூறமுடியாது. ஏனென்றால் கட்டுண்டு இருப்பவர்கள் தாம் படைப்பார்கள், அவருக்கு என்ன தளை இருக்கிறது? ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மட்டுமே ஒருவர் செயல் புரியவேண்டும். அவருக்கு என்ன ஆசை இருக்கிறது? சில தேவைகளைத் தீர்த்துக்கொள்வதற்காகத் தான் உழைக்க வேண்டும், அவருக்கு என்ன தேவை இருக்கிறது?.

**தத்துவமஸி:**

வேதங்களில் கடவுளைக் குறிப்பிடுவதற்கு 'அவன்' என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. 'அது' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் 'அவன்' என்ற சொல் கடவுளை ஆண் என்று காட்டும். எனவே பால் வேற்றுமை இல்லாத 'அது' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நெறி அத்வைதம். இந்த நிர்க்குணப்பொருளுடன் நமது தொடர்பு என்ன? நாமே அவர். அவரும் நாமும் ஒன்றே. நாம் ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமற்ற , எல்லா உயிர்களின் அடிப்படையாக இருக்கின்ற அந்த ஒன்றின் வெளிப்பாடேயாகும். அந்த எல்லையற்ற, நிர்குணப் பொருளிலிருந்து நம்மை வேறாக நினைப்பதால்தான் நாம் துன்பப்படுகிறோம். ஆச்சரியமான அந்த நிர்க்குணப்பொருளுடன் நாம் ஒன்றுபட்டவர்கள் என்பதை அறிவதில்தான் முக்தி இருக்கிறது. இது இந்துசமய திருமறைகளில் காணப்படும் கடவுள் பற்றிய சுருக்கமான இருண்டு கருத்துக்களாகும்.

**முடிந்த முடிவு:**

இன்றைய நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் பழமையான வேதாந்தத்தின் எதிரொலியாகும் என்று சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்துக்கள் இன்று நிருபிக்கப்படுகின்றன. "மனிதன் பொய்யிலிருந்து மெய்க்குச் செல்வதில்லை. தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த உண்மைக்குச் செல்கிறான்" என்று சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தின் உயர் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார். வேதாந்தம் அனைத்து மதங்களின் உண்மைகளையும் ஏற்றுக்கொள்கிறது. ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி" உண்மை ஒன்று அதை மகான்கள் பல பெயரிட்டு அழைக்கிறார்கள் என்பது இருக்கு வேதத்தின் வாக்கு. வேதாந்தம். இம்மை மறுமை ஆகிய இரண்டையும் இணைக்கிறது. அறிவியல் ஆன்மீகம், உலகியல், இறையியல், உயர்குலத்தோன், தாழ்குலத்தோன் ஆகிய வேற்றுமைகளை அகற்றி அனைத்தையும் சமரசப்படுத்துகிறது. இன்று நவீன விஞ்ஞான உலகில் காணப்படும் அனைத்து மனித சமுதாய தீங்குகளுக்கெல்லாம் பரிகாரமாக விளங்கக் கூடியது வேதாந்தக் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மதத்தில் கடவுள்

அருள்தந்தை ஏ. தேவதாசன்
(ஆசிரியர், தொண்டன்)

காரணம் இன்றிக் காரியம் இல்லை என்பர். எது நடந்தாலும் அதற்கு ஒரு காரணம் உண்டு. புகை வருகிறதென்றால் அங்கு நெருப்பு இருக்கவேண்டும். நெருப்பு வராமல் புகை வராது. இதனை CAUSE AND EFFECT என்னும் ஆங்கிலச் சொற்றொடர் உணர்த்தும். எம்மைச் சுற்றிப் பல படைப்புக்களைப் பார்க்கிறோம். (ஒளி, நீர், காற்று போன்றவை) இவை எப்படி உருவாகின்றன? தானாகவா? அல்லது இவற்றைப் படைத்தவர் யாராவது இருக்கின்றாரா? அழகான உடுப்பு ஒன்றைப் பார்த்தால் அதனை யார் தைத்தார்? என்று கேட்கின்றோம். ஒரு கடிதம் வந்தால் யார் அனுப்பினார்? என்று கேட்கின்றோம். அதேபோல அனைத்துப் படைப்புக்களையும் யார் படைத்தார்? அவற்றைப் படைத்த ஒருவர் இருக்கிறார். அவரைத்தான் நாம் இறைவன் என்கின்றோம். (படைப்பு என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டது.) இறைவனைத் தவிர இதனை யாராலும் செய்யமுடியாது.

அனைத்தையும் படைத்த அந்த இறைவன் ஏதோ ஒரு சக்தியாகவோ அல்லது வல்லமையாகவோ மட்டும் இருக்கவில்லை. அவர் உள்ளார்ந்த உறவுள்ள இறைவன். கிறிஸ்தவத்தில் மூவொரு கடவுள் என இறைவனை அழைக்கிறார்கள். இது ஒரு முரண்பாடு உள்ள சொற்றொடர் தான். ஆயினும் அதுதான் உண்மை. இது மனிதனுடைய உருவாக்கம் அல்ல. பதிலாக இறைவனுடைய வெளிப்பாடு. ஒரே கடவுள். ஆனால் மூன்று நிலைகள். இந்த வெளிப்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புனித லூக்காஸ் நற்செய்தி 3:22ல் பார்க்கலாம். (தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது ''என் அன்பார்ந்த மகன் நீயே; உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.) இது தவிர, இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின் ஆதிகால திருச்சபையில் புற இனத்தார் மத்தியில் பணியாற்றிய திருத்தூதர் பவுல், கொரிந்து நகர் இறைமக்களுக்கு தாம் எழுதிய இரண்டாவது மடலை முடிக்கும்போது மூவொரு தேவனின் நாமங்களைக் குறிப்பிட்டு ஆசீர் வழங்கியுள்ளமையும் இங்கு கவனிக்கலாம். (2கொரி. 13:13 - ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும், தூய ஆவியானவரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.) இந்த மூன்று நாமங்களைக் கொண்டவர் ஒருவராக இருக்கிறார். இவரை ஒன்றுக்குள் மூன்று எனவும், மூன்றும் ஒன்று எனவும் குறிப்பிடலாம். மூவொரு நாமங்களையும் பிதா (தந்தை) சுதன் (யேசு) இறை ஆவி என இறைவன் வெளிப்படுத்தினார். இந்த மூவரும் ஒன்றே. (யோவான் 14:11 - நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்; என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால், என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள்.) (யோவான் 15:26 - தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியாவார். அவர் வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார்.)

இந்த இறைவன், மனித மையத்தின் தேவன் எனலாம். படைப்பிற்கெல்லாம் சிகரமாக மனிதனைப் படைத்தார். அந்த மனிதனைத் தனது சாயலாகப் படைத்தார். ''படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக'' என்பது வழக்குத் தொடர். அனைத்துப் படைப்புகளும் மனிதர்களுக்காகவே.... ஆனால் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனையோ அவர் தனக்காக எடுத்துக்கொண்டார். மனிதன் மீது இறைவனுக்கு அவ்வளவு பிரியம். மனிதனுக்காக எதையும் செய்வார். (யோவான் 316 - தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.) நல்லவன், நாணயமானவன் என்போருக்கு மட்டுமல்லாமல் தீயவன், பாவி என்கின்ற சகலருக்காகவும் தம் மகன் யேசுவை சாவிற்குக் கையளித்தார் பரமதந்தை. அதேபோன்று இறையன்பை வெளிப்படுத்த யேசு பின்வருமாறு கூறினார் "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமுமில்லை" (யோவான் 15:13) இது யேசுவின் வெறும் கூற்று மட்டுமல்ல; நிகழ்ச்சியாக்கப்பட்ட போதனை. (1 யோவான் 3:16 - கிறிஸ்து நமக்காக தம் உயிரைக்கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.) ஒருவர் ஒருவருக்காக உயிர் கொடுப்பது அன்பின் உச்ச நிலை. அன்பை இறைவன் மக்கள் மீது காட்டினார். இக்கடவுளின் மறுபெயர் "அன்பு" ஆகும். அன்பே கடவுள். கடவுளே அன்பு என்கிறார்கள் கிறிஸ்தவர்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை; ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்.

இந்த அன்புக் கடவுளின் மாபெரும் திட்டம், மீட்புத் திட்டமாகும். கடவுளுக்கென உருவாக்கப்பட்ட மனிதன் (இணைச் சட்டம் 6:4-5 - இஸ்ராயேலே, செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆண்டவர். உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!) முழு உள்ளத்தோடு ஆண்டவரிடம் அன்பு செலுத்தி அவரது பிள்ளையாக (உரோமர் 8:16 - நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடும் சேர்ந்து தூய ஆவியாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கின்றார்.) வாழ வேண்டியவன், பலவீனத்தால் படைத்த பரமனை மறந்து; தன் பாதையை மறந்து; அவரை விட்டு விலகிப் போகின்றான். (எசாயா 53:6 - ஆடுகளைப்போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம். நாம் எல்லோரும் நம் வழியே நடந்தோம்.) ஆயினும் கிறிஸ்தவர்களின் தேவன், மனிதன் அழியட்டும் என்று அசட்டையாக இருப்பவரல்லர். அவர் விட்டுப்பிரிந்த மனிதனைத் தேடிப் போகின்ற தேவனாக இருக்கின்றார். (லூக்காஸ் 15:4 - உங்களுள் ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணாமல் போனால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பாலை நிலத்தில் விட்டுவிட்டுக் காணாமற் போனதைக் கண்டு பிடிக்கும் வரை தேடிச்செல்ல மாட்டாரா? 'நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" (மத்தேயு 9:13) என்ற யேசுவின் வார்த்தைகள் பாவிகள்மட்டில் பரமனுக்கு இருக்கும் பரிவைக் காட்டுகின்றன. யேசுவின் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பல. அவற்றில் ஒன்று அவர் 'பாவிகளின் நண்பன்' என்பதாகும். (லூக்காஸ் 15:2 - பரிசேயரும் மறைநூல் அறிஞரும் "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று முணுமுணுத்தனர்.) கிறிஸ்தவர்களின் கடவுள் மனிதனுடைய கடந்தகால குற்றங்களை மனதில் வைத்து பழிவாங்குபவரல்லர். அவர் அளவில்லாத இரக்கமுடையவர். பாவங்களை மனிதன் மனஸ்தாபத்தோடு அறிக்கையிடும்போது மன்னிக்கின்ற தேவனாக விளங்குகின்றார். (தானியேல் 9:9 - எங்கள் தலைவரும் கடவுளுமாகிய உம்மிடத்தில் இரக்கமும் மன்னிப்பும் உண்டு. நாங்களோ உம்மை எதிர்த்து நின்றோம்.) (மீக்கா 7:19 - அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம் தீச் செயல்களை மிதித்துப் போடுவார். நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார்.) இரக்கத்தின் தேவனை யாரும் அணுக முடியும். பாவியான மகதலா மரியாள் என்ற பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவை அணுகினாள். தன் பாவத்திற்காகக் கண்ணீர் சொரிந்து மன்னிப்புக் கேட்டாள். (லூக்காஸ் 7:37-38 - அந்நகரில் பாவியான பெண் ஒருவர் இருந்தார், யேசு பரிசேயருடைய வீட்டில் உணவு அருந்தப்போகிறார்; என்பது அவருக்கு தெரியவந்தது. உடனே அவர் நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழைக் கொண்டு வந்தார். யேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவர் அழுதுகொண்டே நின்றார். அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து தம் கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார்.) சின்னஞ் சிறார்களை என்னிடம் வரவிடுங்கள் என்றவர் யேசு. (லூக்காஸ் 18:16 - ஆனால் யேசு அவர்களைத் தம்மிடம் வரவழைத்து; "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.)

சுமையோடு வாழ்பவர்களுக்கு யேசு ஒரு சுமை தாங்கி. கண்ணீரோடு வாழ்பவர்களுக்கு யேசு ஒரு கைக்குட்டை; வருத்தப்பட்டோருக்கு மருத்துவர்; தீய சக்தியினால் சிறைப்பட்டோருக்கு யேசு ஒரு விடுதலை நாயகன்; பாவம் செய்தோருக்கு யேசு பாவ மன்னிப்பு அளிப்பவராக இருக்கிறார். (லூக்காஸ் 4:18-19 - ஆண்டவரின் ஆவி என் மீது உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.)

எங்கேயோ வானத்தில் தொலைதூரத்தில் உறைபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல கிறிஸ்தவர்களின் தேவன். மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட நிகழ்வில் மனித சமுதாயத்தில் சரித்திரத்தில் வாழ்பவராக அவர் இருக்கிறார். (விடுதலைப் பயணம் 3:12 - நான் உன்னோடு இருப்பேன்) ஒரு சரித்திர நிகழ்வில் நான் உன்னோடு இருப்பேன்; என மோசேக்கு வாக்குப் பண்ணுகிறார்; வாக்கு மாறாத தேவன். திருத்தூதர்களின் பணி வாழ்வில் இறை ஆவியான இறைவன் அவர்களோடு கூட இருப்பார் என இறைமகன் யேசு வாக்குப்பண்ணுகிறார். (யோவான் 14:16 - நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன். உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்) சரித்திரத்தில் சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியபோது, தன்னைத் துன்புறுத்தியதாகவே யேசு குறிப்பிட்டார். (திருத்தூதர் பணி 9:5 - அதற்கு அவர் ஆண்டவரே நீர் யார்? எனக் கேட்டார். ஆண்டவர், நீ துன்புறுத்தும் யேசு நானே.) இந்தவகையில், மக்கள் மத்தியில் வாசம் செய்பவராகவே கிறிஸ்தவர்களின் தேவன் விளங்குகிறார்.

கிறிஸ்தவர்களின் தேவன், ஆன்மீக ரீதியில் மட்டும் அக்கறை காட்டுகின்றவராக இல்லாமல் முழு மனிதனிலும் அக்கறை உள்ளவர்களாகவே விளங்குகின்றார். மனிதனுக்குப் பல தேவைகள் உள்ளன. அத்தேவைகளை அவன் பிரார்த்தனையில் கேட்கின்றபோது, அவற்றுக்குச் செவிமடுத்து, அவை மனிதனுக்கு நன்மை பயப்பவை என்று கண்டால் அவற்றை அருள்கின்ற தேவனாக அவர் விளங்குகின்றார். மத்தேயு 7:7 - கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்) அன்னா என்ற பெண், குழந்தைப் பாக்கியம் கேட்டாள். (1 சாமுவேல் 1:11 - அவள் பொருத்தனை செய்து வேண்டிக்கொண்டது, படைகளின் ஆண்டவரே, நீ உம் அடியாளாகிய என் துயரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோக்கி என்னை மறவாமல் நினைவு கூர்ந்து எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தருவீரானால் அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன். அவன் தலைமேல் சவரக்கத்தியே படாது.) ஆண்டவரின் அடியான் ஏலி ஆண்டவர் பெயரால் அவ்விண்ணப்பத்திற்குப் பதிலளித்தார். (1 சாமுவேல் 1:17 - பிறகு ஏலி மனநிறைவோடு செல், இஸ்ராயேலின் கடவுள் நீ அவரிடம் விண்ணப்பித்த உனது வேண்டுகோளை கேட்டருள்வார்" என்று பதிலளித்தார்.) ஏழை மக்களின் பசி பட்டினி போக்கினார். ஆண்டவர் உரைப்பது இதுவே. நாட்டில் ஆண்டவர் மழை பெய்யச் செய்யும் நாள்வரை பானையிலுள்ள மாவு தீராது. கலத்திலுள்ள எண்ணெயும் குறையாது என்று சொன்னார். அவர் போய் எலியா சொன்னபடியே செய்தார். அவரும் அவருடைய மகனும் அவர் வீட்டாரும் பல நாள் சாப்பிட்டனர்.)

உடல் நோய்களை நீக்கிச் சுகமாக்கினார். சூம்பிய கையை குணமாக்கினார். லூக்காஸ் 16:10 - பிறகு அவர் சுற்றிலும் திரும்பி அவர்கள் யாவரையும் பார்த்துவிட்டு உமது கையை நீட்டும் என்று அவரிடம் கூறினார். அவரும் அப்படியே செய்தார். அவருடைய கை நலமடைந்தது.) காய்ச்சலைக் குணமாக்கினார் (லூக்காஸ் 4:3-9 - யேசு அவருக்கருகில் நின்று காய்ச்சலைக் கடிந்துகொள்ள அது அவரைவிட்டு நீங்கிற்று. உடனே அவர் எழுந்து அவருக்குப் பணிவிடை செய்தார்.) தீய ஆவிகளிலிருந்து மக்களை விடுவித்தார். (லூக்காஸ் 4:35 - "வாயை மூடு. அவரை விட்டு வெளியே போ" என்று யேசு அதனை அதட்டினார். அப்பொழுது பேய் பிடித்தவரை அவர்கள் நடுவே விழச் செய்து அவருக்கு ஒரு தீங்கும் இழைக்காமல் பேய் அவரை விட்டு வெளியேறிற்று.) குருடர்களைக் குணமாக்கினார். (யோவான் 9:7 - நீர் சீலோவாம் குளத்துக்குப்போய் கண்களைக் கழுவும் என்றார். 'சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் போய்க் கழுவி பார்வை பெற்று திரும்பி வந்தார்.)

இவை மட்டுமன்றி, இறந்தவர்களைக்கூட உயிர்ப்பிக்கும் அன்பு கொண்ட தேவன் அவர். (யோவான் 11:43-44 இவ்வாறு சொன்ன பின் 'இலாசரே வெளியே வா' என்று கூப்பிட்டார். இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார். அவருடைய கால்களும் கைகளும் துணியால் சுற்றப்பட்டிருந்தன. 'கட்டுக்களை அவிழ்த்து அவனைப் போகவிடுங்கள்' என்று யேசு அவர்களிடம் கூறினார்.) இவ்வாறு வல்லமையுடைய கடவுளாக மட்டுமல்லாமல் மக்களின் சகலவிதமான குறைகளையும் போக்குகின்ற கடவுளாகவும் அவர் விளங்குகின்றார்.

இறைத் தன்மையில் விளங்கிய இறைவன் யேசு என்ற பெயரில் மனிதனாகப் பிறந்தார். அவர் இறைவனாகவும், அதே வேளையில் மனிதனாகவும் வாழ்ந்தார். இறைமகனைப் பாவத்திலிருந்து மீட்டு எடுத்து விண்ணகத்தில் முடிவில்லாத வாழ்வைக் கொடுப்பதற்காகச் சிலுவையில் இறந்து மூன்றாம் நாள் உயிர் பெற்றார். இந்த இறப்பு, உயிர்ப்பைப் பற்றி முன்கூட்டியே அவர் அறிவித்தார். (மத்தேயு 20: 18-19 - "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப் படுவார்." என்று அவர்களிடம் கூறினார்.) தாம் சொன்னபடியே 3ம் நாள் உயிர்த்தெழுந்தார். (லூக்காஸ் 24:5 - இதனால் அப் பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அபபெண்களை நோக்கி உயிரோடிருப்பவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லறையில் தேடுவதேன்?") கிறிஸ்தவர்களின் தேவன் இறப்பைக் கடந்தவராகவும், தம்மை நம்பி விசுவசித்து, தம் போதனைகளின்படி வாழ்ந்து இறக்கின்ற மக்களை உயிர்ப்பிக்கின்ற வராகவும் இருக்கின்றார். இறக்கப்போகின்ற கள்வன் மனஸ்தாபத் தோடு தன்னை நினைவு கூருமாறு அவரிடம் கேட்டபோது அவனுக்கு யேசு கொடுத்த பதில் இந்த விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. (லூக்காஸ் 23:42-43 - பின்பு அவன் "யேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்றுவரும்போது என்னை நினைவிற்கொள்ளும்" என்றான். அதற்கு யேசு அவனிடம் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.)

இவ்வாறான பண்புகளைக் கொண்ட பரமனாக கிறிஸ்தவர்களின் கடவுள் விளங்குகிறார். எனவே கிறிஸ்தவன் நம்பிக்கையோடு வாழ்கிறான். தன்னைப் படைத்த கடவுள் - தன்னை மீட்ட கடவுள் - கைவிடமாட்டார் என்பது அவனது நம்பிக்கை. வாக்கு மாறாத தேவன். தாம் கொடுத்த வார்த்தையின்படி வாழ்கின்றவர்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் வாழ்வளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வரலாற்றில் மதம்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல்களில் மட்டுமே மதம் என்னும் சொற், கடவுளைப் பற்றியாதல் உயிரைப் பற்றியாதல் உலகைப் பற்றியாதல் ஒழுக்கத்தைப் பற்றியாதல் மக்கட்குழுவினர் கொண்ட கொள்கைக்கும் பெயராய்த் தமிழ் நூல்களில் - வழங்கப்பட்டு வருகிறது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு அ.்.தாவது இற்றைக்கு ஆயிரத் தெழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட நூல்களில் 'மதம்' எனும் சொல் கொள்கை எனும் பொருளில் வருதலைக் காண்கிலேம். புறநானூறு, பரிபாடல், பத்துப்பாட்டு முதலான பழைய இலக்கியங்களில் 'மதம்' எனும் சொல் வலிமை, செருக்கு, அறியாமை, அழகு முதலான பொருள்களில் வருகின்றதேயன்றிக் கொள்கை எனும் பொருளில் வரவில்லை. கி பி இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதான மணிமேகலையிலுங் கூடச் 'சமயம்' என்னுஞ் சொல் வந்திருக்கிறதேயன்றி அதற்கு ஈடான 'மதம்' என்னுஞ் சொல் வரவில்லை. கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பாதியிற் தோன்றிய மாணிக்க வாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசக காலத்தில் இருந்து தான் 'மதம்' எனும் சொல் கொள்கையெனும் பொருளில் இன்று காறும் வழங்கி வருகிறது.

மறைமலை அடிகள்
(தமிழர்மதம் - பக்கம் 45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org